# கொரோனா விடுமுறைக் கால விசேட செயற்றிட்டம்.

# தமிழ் மொழியும் இலக்கியமும்.

# தரம் - 10.

# இரண்டாந் தவணையை உள்ளடக்கிய செயலட்டை.

**01.பின்வரும் தொடர்களை சந்தி பிரித்து எழுதுக.**

1.“தேனருவி திரையெழும்பி வானின் வழி யொழுகும்”

2.“ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும்”

3.“போரெடுத்து வருமதன் முன்செல”

4.“நீங்க ளைவீரு மொருவீரா அகலிடத்தை”

5.“நீரெ டுத்து வருவதற் கவள்”

6.“பங்கப் பழனத் துழுமுழவர்”

7.“என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை”

8.“சூழ மேதி யிறங்குந் துறையிற்”

9.கொங்கர் கமரா பதியளித்த கோவே”

10.“பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்”

**02.பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக**

**ஏதிர்பாற் சொற்கள் - அ.்.றிணை**

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| நண்டு | | |
| ஆடு | | |
| குதிரை | | |
| புலி | | |
| நரி | | |
| பன்றி | | |
| மயில் | | |
| குரங்கு | | |
| யானை | | |

## 03.பின்வரும் வினாக்களுக்காக விடைகளை பாடப்புத்தகங்களில் தெரிவு செய்து எழுதுக.

1.**செவிசாய்த்தல்** எனும் பொருள் தரும் மரபுத்தொடர் யாது?

2.ஆயள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காத்து வாழ்பவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

3.சொற்களுக்குரிய பொருளை அகரவரிசைப்படி திரட்டித்தரும் நூல்?

4.சொற்களுக்குரிய பொருளை செய்யுள் வடிவில் திரட்டித்தரும் நூல்?

5.பிற்காலத் தேவைகளுக்காக பொருளை சேமித்து பாதுகாத்து வைப்பதை எவ்வாறு அழைப்பர்?

6.அறிஞர் பலர் கூடி வாதிடும் களம் எவ்வாறு அழைக்கப்படும்?

7.புராதன பொருட்களை சேமித்து வைக்கப்படும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

8.அனலில் இட்ட மெழுகு போல எனும் உவமைத்தொடர் தரும் கருத்து யாது?

9.இலவு காத்த கிளி போல எனும் உவமைத்தொடர் தரும் கருத்து யாது?

10.காட்டில் எறிந்த நிலாப் போல எனும் உவமைத்தொடர் தரும் பொருள்?

11.பின்வரும் வாக்கியத்தில் உள்ள எழுவாய்,பயனிலையை இனங்காண்க.

**“பரித் தேரேறி வாவென்றழைப்பான் போலவே கூவினவே கோழிக்கும்”**

12.**“வானக் கடலினில் வெள்ளி ஓடம் ஒன்று கண்டேன்”** இத் தொடரில் இடம்பெற்றுள்ள அணி யாது?

13.**முகிலினங்கள் அலைகின்றதே முகவரிகள் தொலைந்தனவோ?முகவரிகள் தவறியதால் அழுதிடுமோ அது மழையா?** இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?

14.**பளிங்கினால் செய்யப்பட்ட பதுமையைப் போல அவள் வாசலில் நின்றாள்.**இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?

15.தமயந்தி கடி மாலை சூடினாள்.இங்கு இடம்பெறும் உரிச்சொல் யாது?அது உணர்த்தும் பொருள் யாது?

16.காலாவதி எனும் சொல்லை பொருள் புலப்படும் படியாக ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

17.பின்வருவனவற்றில் கூட்டுப்பெயராக அமையாத சொல்.

(முயற்சி,வானொலி,பாடசாலை,பனையோலை)

18.கர்ணனுக்கு நண்பன் துரியோதனன்.இங்கு இடம்பெறும் வேற்றுமை உருபு யாது?அது எத்தனையாம் வேற்றுமைக்குரியது?

19.மனவேதனை என்பது எவ்வகையான புணர்ச்சியாகும்?

20.கடலலை என்பது எவ்வகையான புணர்ச்சியாகும்?